DINAMALAR 24 AUG 09



ஈஷா பவுண்டேஷன் அங்கமான, 'பசுமை திருப்பூர் இயக்கம்' சார்பில், திருப்பூரில் பசுமை மாரத்தான் ஓட்டத்தை, நடிகை ஸ்ரேயா, மணியடித்து நேற்று துவக்கி வைத்தார். அருகில், ஈஷா யோகா மையத்தின் நிறுவனர் ஜக்கி வாசுதேவ், நடிகர் பிரகாஷ்ராஜ் மற்றும் பலர்.

# நதிகளின் கரையில் மரம் வளர்ப்போம்; நதிகளை காப்போம்

## திருப்பூரில் ஜக்கி வாசுதேவ் பேச்சு

**திருப்பூர், ஆக. 24-**

''கொங்கு மண்டலத்தில் உள்ள நதிகளின் கரைகளில் மரக்கன்றுகளை நட்டால் மட்டுமே, வருங்கால சந்ததியினர் நதிகளை கண்களில் பார்க்க முடியும். இல்லாவிட்டால், பாடப்புத்தகங்களில் மட்டுமே நதிகளை பற்றி படிக்க முடியும்,'' என திருப்பூரில் ஜக்கி வாசுதேவ் பேசினார்.

ஈஷா பவுண்டேஷன், பசுமை திருப்பூர் இயக்கம் சார்பில், திருப்பூரில் ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா நேற்று நடந்தது; துணைமுதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

ஏற்றுமதியாளர் சங்க தலைவர் சக்திவேல் பேசுகையில், ''புவி வெப்பமடைதலை தடுக்க மரக்கன்று நடுவது வரவேற்கத்தக்க விஷயம். ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பில் 1,000 மரக்கன்றுகளை தத்தெடுத்து, எங்கள் பங்களிப்பை செலுத்துகிறோம்,'' என்றார்.

'சைமா' தலைவர் ஈஸ்வரன் பேசுகையில், ''உள்ளாட்சி அமைப்புகளில் குறிப்பிட்ட நாளில் மரக்கன்று நட அரசு உத்தரவிட வேண்டும். அதிகளவு மரக்கன்றுகள் நடுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும்,'' என்றார்.

எம்.எல்.ஏ., கோவிந்தசாமி பேசுகையில், ''சட்டசபையில் பேசி, அதிகளவு மரக்கன்றுகள் நடுபவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்,'' என்றார்.

நடிகை ஸ்ரேயா பேசுகையில், ''மரங்கள் நம்மிடம் எதையும் எதிர்பார்க்காமல், நமக்கு பல நன்மைகளை செய்கின்றன. மரம் அழிக்கப்படுவது தொடர்ந்தால், எதிர்காலத்தில் ஆக்சிஜன் சிலிண்டர் மூலம் மட்டுமே சுவாசிக்க நேரிடும். இந்நாளில், பாலித்தீன் பைகளை உபயோகிப்பதை குறைப்போம்; காகிதங்களை வீணடிப்பதை குறைப்போம் என உறுதி எடுப்போம்,'' என்றார்.

நடிகர் பிரகாஷ்ராஜ் பேசியதாவது: குட்டி ஜப்பான் என கூறும் போது, பெருமையாக இருக்கிறது. அதிகளவு பணம் ஈட்டுகிறோம்; வெயிலை சமாளிக்க 'ஏசி' வாங்குகிறோம்; 'ஏசி' காரில் பயணம் செய்கிறோம், இதையெல்லாம் பெருமையாக கூறிக்கொள்கிறோம்.

ஆனால், உண்மையில் சுற்றுப்புறச்சூழலை கெடுத்து வைத்திருக்கிறீர்கள். நிலத்தடி நீர்மட்டம் 100 அடிக்கும் கீழே சென்றுவிட்டது; ஆறுகள் வற்றி விட்டன என்பதை யாரும் கவனிக்கவே இல்லை.

சிறு பிரச்னைகளை கண்டுகொள்ளாமல் விட்டதால், இன்று பூதாகரமாக இருக்கிறது. இதற்கு, தீர்வு இருக்கிறது. வாழ்வில் எவ்வளவு பெரிய பிரச்னைக்கும் சிறிய தீர்வுதான். அதைப்போல, மரக்கன்றுகளை . நட்டால் போதும், சுற்றுப்புற சூழலை பாதுகாக்க முடியும்.

இவ்வாறு, பிரகாஷ்ராஜ் பேசினார்.

ஜக்கி வாசுதேவ் பேசியதாவது:

இளைஞர்களின் வேகத்தை பார்த்தால், ஒரே நாளில் 50 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டுவிட முடியும். இன்று நடுவதுடன் வேலை முடிந்து விடவில்லை. தொடர்ந்து பராமரிக்க வேண்டும். நீரூற்றுவதற்காக இரு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், நாமும் அக்கறை செலுத்தி, மரக்கன்றுகளுக்கு தண்ணீர் விட வேண்டும்.

தமிழகத்தில் 12 கோடி மரக்கன்று நடுவது சிரமமில்லை; எளிதுதான். ஆறு கோடி பேர்; 12 கோடி மரங்கள் அவ்வளவே. இந்தியாவில் கங்கை நதி வெறும் ஆறாக பார்க்கப்படவில்லை; அது, புனிதமானது. சுற்றுப்புறச்சூழல் பாதிப்பால், வற்றாத ஜீவ நதி, பருவகால ஆறாக மாறி விடும் அபாயம் உள்ளது.

ஆண்டுதோறும் விஞ்ஞானிகள், புவிவெப்பமடைதலை தடுக்க ஆலோசனை கூட்டங்கள் நடத்துகின்றனர். தீர்வு கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் மரக்கன்றுகளை நடுவோம்; நாம் பிறந்தபோது இருந்த பசுமையை மீட்போம்; மீதியை இயற்கை பார்த்துக் கொள்ளும்.

கொங்கு மண்டலத்தில் பெரிய அளவிலான ஆறுகள் இல்லை. இருக்கும் சிற்றாறுகள் பலவும் வற்றி விட்டன. ஆறுகள் இருந்ததற்கான அடையாளம் இல்லாமல் போய்விடும் அபாயம் உள்ளது. கொங்கு மண்டலத்தில் உள்ள ஆறுகளின் இருகரைகளிலும், அரை கி.மீ., தூரத்துக்கு மரக்கன்றுகளை நட வேண்டும்.

அப்போதுதான் ஆறுகள் அழியாமல் பாதுகாக்கப்படும். எதிர்காலத்தில் கொங்கு மண்டலத்தில் பிறக்கும் குழந்தைகள் ஆறுகளை கண்களால் காண முடியும். இல்லாவிட்டால், பாடப்புத்தகத்தில் மட்டுமே படிக்க முடியும்.

கடந்த 17 ஆண்டுகளுக்கு முன், திருப்பூரில் மரக்கன்றுகள் நட அழைப்பு விடுத்த போது, யாரும் முன்வர வில்லை. அப்போது நட்டிருந்தால், திருப்பூரில் 17 ஆண்டு வயதான மரங்களால் பசுமை பெற்றிருப்போம்.

தற்போது, தொழில் துறையினர், பொதுமக்கள், தன்னார்வ தொண்டர்கள் என அனைத்து துறையினரும் வந்திருப்பது வரவேற்கத்தக்கது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அரசு அல்லது குறிப்பிட்ட அமைப்புகளே பங்கேற்க வேண்டும் என்பது இல்லை. மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் அந்த கடமை இருக்கிறது.

இவ்வாறு, ஜக்கி வாசுதேவ் பேசினார்.